## ***பிறை விவகாரம் பற்றிய தெளிவு பெறுவது எவ்வாறு?***

தற்போது நமதூரில் **"சர்வதேசப் பிறை"** என்ற வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது. அதாவது| உலகின் எப்பகுதியில் பிறை கண்டாலும் அதனை இலங்கையில் பின்பற்ற வேண்டும், றமழான் மாத ஆரம்பம், நோன்பு, ஹஜ் பெரு நாட்கள் சம்மந்தமாக, அகில இலங்கை ஜம்யிய்யதுல் உலமா சபை வெளியிடும் தீர்மானங்களை ஏற்கக் கூடாது என்பதாகும்.

சர்வதேவசப் பிறைக்குத்தான் குர்ஆன், ஹதீதில் ஆதாரம் காணப்படுவதாகவும், உள்நாட்டுப் பிறைக்கு ஆதாரம் கிடையாது என்றும் வாதிடுகின்றனர். இது உண்மைக்குப் புறம்பானதாகும். சர்வதேசப் பிறைக்கு முன்வைக்கப்படும் ஆதாரங்களே பலயீனமானதாகும். உள்நாட்டுப் பிறைக்குரிய ஆதாரங்கள் உறுதியானதும், நபி (ஸல்) அவர்களின் காலம் தொட்டு இன்று வரைக்கும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற விடையமுமாகும்.

சர்வதேசப் பிறையை நியாயப்படுத்த வெளிநாட்டுச் சாட்சிகளை ஏற்க வேண்டும் என்ற வாதத்தை முன்வைக்கின்றார்கள். இதற்கு ஆதாரமாக நபி (ஸல்) அவர்கள், மதீனாவுக்கு வெளியிலிருந்து வந்த சாட்சிகளை ஏற்றுக் கொண்டார்கள் எனக் கூறும் ஹதீத்களை காட்டுகின்றனர். ஆனால், அந்த ஹதீத்கள் அனைத்தும் ஏற்றுக் கொள்ள முடியாத பலயீனமானவைகளாகும்.

சர்வதேசப் பிறை மூலம் முஸ்லிம்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்த முடியும் என்றும் வாதிடுகின்றனர். இவ்வாதம் நிதர்சன உண்மைக்கு முரணானதாகும். சர்வதேசப் பிறை அறிமுகப்படுத்தப்பட்ட இடங்களிலெல்லாம் முஸ்லிம்கள் மத்தியில் சண்டை, சச்சரவுகள் பெருகியதே தவிர ஐக்கியம் ஏற்படவில்லை. அதே போன்று சர்வதேசப் பிறை வாதம் நமதூரான காத்தான்குடியிலும் தேவையற்ற பிளவுகளை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஒரே நாளில் நோன்பு நோற்று பெருநாள் கொண்டாடிய நமதூர் மக்கள் இந்த இனியநாட்களில் பிளவு படவேண்டிய நிலைக்குத் தள்ளப்படப் போகின்றனர்.

எனவே பிறை சம்மந்தமான தெளிவை, மக்களுக்கு வழங்குவது எமது தலையாயக் கடமையெனக் கருதி இப்பிரசுரத்தை வெளியிடுகிறோம்.

### ***உள்நாட்டுப் பிறையின் விளக்கமும், அதன் ஆதாரங்களும்***

உள்நாட்டுப் பிறையென்றால்| றமழான், ஷவ்வால் மாதங்களின் ஆரம்பங்களை ஒவ்வொரு நாடும் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். அதாவது வித்தியாசமான நாடுகளுக்கு மத்தியில், ஒரு நாடு பார்க்கும் பிறையை பின்பற்றுவது கடமையில்லை என்பதாகும்.

உள்நாட்டுப் பிறைக்கு பின்வரும் நபிமொழியை ஆதாரங்களாகக் கொள்ளப்படுகின்றன:-

**(அ)**

روى مسلم (2523) عن كريب أن أم الفضل بنت الحارث بعثته إلى معاوية بالشام، قال: فقدمت الشام فقضيت حاجتها واستهلّ عليّ رمضان وأنا بالشام فرأيت الهلال ليلة الجمعة ثم قدمت المدينة في آخر الشهر فسألني عبد الله بن عباس ثم ذكر الهلال فقال: متى رأيتم الهلال؟ فقلت: رأيناه ليلة الجمعة فقال: أرأيت؟ فقلت: نعم ورآه الناس وصاموا

وصام معاوية، فقال: لكنا رأيناه ليلة السبت فلا نزال نصوم حتى نكمل ثلاثين أو نراه, فقلت: أو لا تكتفي برؤية معاوية وصيامه؟ فقال: لا، هكذا أمرنا رسول الله صلى الله عليه وسلم.

“குரைப் என்ற தாபிஈ அறிவிக்கின்றார்:- உம்முல் பழ்ல் (றழி) அவர்கள் என்னை ஷாமிலே (டமஸ்கஸில்) இருந்த முஆவியா (றழி) அவர்களிடம் அனுப்பினார்கள். நான் ஷாமுக்கு வந்து அவரது தேவையை நிறைவு செய்தேன். நான் ஷாமில் இருக்கும் போதே றமழான் ஆரம்பமாகி விட்டது. நான் **தலைப்பிறையை வெள்ளிக் கிழமை இரவு** பார்த்தேன். பின்னர் அம்மாதத்தின் இறுதிப் பகுதியில் மதீனா வந்து சேர்ந்தேன். அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரழி) அவர்கள் என்னிடம் பல விடையங்களை விசாரித்தார்கள். பிறைகுறித்தும் ஞாபகப்படுத்தி, எப்போது நீங்கள் பிறை கண்டீர்கள்? எனக் கேட்டார்கள். வெள்ளிக் கிழமை இரவு கண்டேன் என நான் கூறினேன். நீரே கண்டீரா? என அவர் வினவினார். ஆம் நானும், மக்கள் பலரும் கண்டு நோன்பு நோற்றோம், முஆவியாவும் நோன்பு நோற்றார் என்றேன். அப்போது அவர் “ **நாங்கள் சனிக் கிழமை இரவுதான் பிறை கண்டோம்.** முப்பது நாற்கள் முடியும் வரை அல்லது பிறை காணும் வரை நோன்பு பிடிக்கப் போகிறோம் என்றார். அதற்கு நான் **“முஆவியா கண்டு நோன்பு நோற்றதை நீங்கள் போதுமாக்கிக் கொள்ளமாட்டீர்களா?** எனக் கேட்டேன். **இல்லை இவ்வாறுதான் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் எமக்கு ஏவினார்கள் என இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் கூறினார்கள்.** (முஸ்லிம்:-2523)

இந்த ஹதீத், **வித்தியாசமான தூரத்தில் வாழ்பவர்கள், அடுத்தவர்களுடை பிறையைப் பின்பற்ற வேண்டியதில்லை,** தாம் பார்க்கும் பிறைக்கேற்ப நோன்பு நோற்க முடியும் என்பதை உணர்த்துகிறது. ஏனெனில் குரைப் அவர்கள் “முஆவியா (ரழி) அவர்கள் கண்டு நோன்பு நோற்றதை நீங்கள் போதுமாக்கிக் கொள்ளமாட்டீர்களா? என வினவ, அதற்கு, இப்னு

அப்பாஸ் (றழி) அவர்கள் ‘இல்லை| இவ்வாறுதான் இறைத் தூதர் ஏவினார்கள் என்று கூறியதிலிருந்து, வேறுபட்ட பகுதிகளில் வாழ்பவர்கள், தனிப் பிறை கண்டு நோன்பை நோற்றுக் கொள்ளவும், அதனை முடித்துக் கொள்ளவும் வேண்டும் என்பது தெளிவாக விளங்கக் கூடியதாக உள்ளது. குரைப் அவர்களின் கேள்வியையும், இப்னு அப்பாஸ் (றழி) அவர்களின் பதிலையும் தொடர்புபடுத்தினால் “இவ்வாறுதான்” என்ற வார்த்தைக்கு, “ஷாமிலே கண்ட பிறையை நாங்கள் பின் பற்றத் தேவையில்லை என்ற அர்த்தம் உள்ளது என்பது புலனாகிறது.

மேலும் “இறைத் தூதர் எங்களை ஏவினார்” என்பதிலிந்து, பகுதிக்குப் பகுதி பிறை பார்ப்பது நபி (ஸல்) அவர்களின் கட்டளை என்பதும், அது இப்னு அப்பாஸ் (றழி) அவர்களின் சுய முடிவு அல்ல என்பதும் தெளிவாகின்றது.

சிலர் குரைப் என்பவர் ஒரே சாட்சி என்பதினால்தான் அவர் ஷாமில் பிறை கண்டதை இப்னு அப்பாஸ் (ரழி) ஏற்க வில்லை என வாதிடுகின்றனர். இது தவறான யூகமாகும். ஏனெனில், அதுதான் காரணமாக இருந்தால், “எனது சாட்சியத்தை ஏற்கமாட்டீர்களா? என்றுதான் குரைப் கேட்டிருப்பார்களே தவிர முஆவியா (ரழி) அவர்கள் கண்டு நோன்பு நோற்றதை போதுமாக்கிக் கொள்ளமாட்டீர்களா? என்று கேட்டிக்கமாட்டார்கள். எனவே, இந்த ஹதிதில் ஒரு சாட்சியா, அல்லது இரு சாட்சியா தேவை என்பது பற்றியோ, வெளிநாட்டு சாட்சியை ஏற்க முடியுமா? முடியாதா? என்பது பற்றியோ அறவே கூறப்படவில்லை.

அடுத்ததாக நபி (ஸல்) அவர்களின் காலத்தில் வித்தியாசமான தூரத்தில் வாழ்பவர்களை பின் வருமாறு தரப்படுத்தலாம்:-

1) ஒரு பிரதேசத்தில் வாழ்கின்ற ஒரே கோத்திர மக்கள்.

2) நீர் காணப்படும் இடங்களைத் தேடி அங்கே வாழும் நாடோடி மக்கள்.

3)செழிப்பான பகுதிகளைத் தெரிவு செய்து வாழும் மக்கள்.

4)நகரங்களில் வாழும் மக்கள்.

5)நாடுகளில் வாழும் மக்கள்.

இம்மக்கள் அனைவரும் தத்தமது பகுதியில் பிறை கண்டே நோன்பை ஆரம்பித்து, அப்படியே முடித்தும் கொண்டார்கள். பிறர் கண்ட பிறையை பின் பற்ற வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் இம்மக்களுக்கு கட்டளையிடவில்லை. அதே போல் பிறை கண்ட செய்தி கிடைத்தால் அந்நாளை கழாச் செய்ய வேண்டும் எனப் பணிக்கவுமில்லை.

# (ஆ)

روى البخاري (1909) ومسلم (2521) عن أبي هريرة رضي الله عنه قال: قال رسول الله صلى الله عليه وسلم: صوموا لرؤيته وأفطروا لرؤيته.........

"பிறையைப் பார்த்து நோன்பு நோற்றுக் கொள்ளுங்கள், இன்னும் பிறையைப் பார்த்து நோன்பை முடித்துக் கொள்ளுங்கள்' என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைறா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (புஹாரி: 1909, முஸ்லீம்: 2512)

அக்காலத்தைப் பொறுத்த வரை, ஒரு நாட்டில் பிறை காணின் அதனை அடுத்த நாடுகளும் பின்பற்ற வேண்டும் என்பது சாத்தியமற்ற ஒன்றாகும். நபி(ஸல்)அவர்கள், ஒரு காலமும் சாத்தியமற்ற விடையத்தை செய்ய வேண்டும் என கட்டளையிடமாட்டார்கள். எனவே **"நீங்கள் பிறையைக் கண்டு நோன்பு நோற்றுக் கொள்ளுங்கள்"** என்ற நபியவர்களின் கட்டளை, அவ்வப்பகுதிகளில் வாழும் முஸ்லீம்களை நோக்கி இடப்பட்டதே தவிர பூமியில் வாழும் அனைத்து முஸ்லீம்களையும் நோக்கி இடப்பட்டதல்ல என்பது தெளிவாகிறது.

மேலும், மேற்படி ஹதீதில் பிறையைக் கண்டவர்களே, நோன்பை ஆரம்பிக்குமாறு கட்டளையிடப்பட்டிக்கின்றது. பிறையைக் காணாதவர்கள், நோன்பை ஆரம்பிக்குமாறு வேண்டப்படவில்லை. இதன் படி ஒரு நாட்டில் பிறை காணப்படின் ஏனைய நாடுகளில் உள்ளவர்கள் காணாத வரை, அப்பிறையைப் பின்பற்ற வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு இல்லை. இது குரைப் (ரஹ்) அவர்களின் ஹதீஸ் மூலம் உறுதியாகின்றது.

**(இ)**

அபூ பக்ர் (றழி), உமர் (றழி), உஸ்மான் (றழி) அலி (றழி) ஆகியோரின் ஆட்சிக் காலங்களில், இஸ்லாமிய சாம்ராஜ்யம் விரிவடைந்து காணப்பட்டிருந்தும், மதீனாவில் கண்ட பிறையை தூரப் பிரதேசத்தில் அமுல்படுத்தியதாக தகவல்கள் இல்லை. இது நபியவர்கள் தூரப் பிரதேசத்தவர்களுக்கு தாங்கள் காணாத பிறையைப் பின்பற்றிச் செல்லவில்லை என்பதை பலப்படுத்துகின்றது.

ஈ) ஒரு நாட்டில் தென்படும் பிறையை தூர நாடுகளிலும் பின்பற்ற வேண்டும் என நபிவர்களின் தோழர்களில் ஒருவராவது கூறியதாக தகவல் இல்லை. மாறாக ஒரு நாட்டில் காணப்பட்ட பிறையை ஏனை நாடுகளில் பின்பற்றத் தேவையில்லை என இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் கூறியுள்ளார்கள். இக்கருத்துக்கு எதிராக ஸஹாபி ஒருவர் கருத்து வெளியிட்டதாக தகவல் இல்லை. (தம்ஹீத்: 9:34)

(உ) அந்தந்தப் பகுதிகளில் தென்படும், கிழக்கு வெளுத்தல், சூரியன் உச்சி சாய்தல், மனிதனின் நிழல், செவ்வானம் போன்ற வானிலை மாற்றங்களைக் கொண்டுதான் தொழுகை நேரங்கள் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதை இமாம்கள் மத்தியில் ஏகோபித்த முடிவு (இஜ்மா) காணப்படுகின்றது.

அதே போன்று, அந்தந்தப் பகுதிப் பிறையைக் கொண்டு றமழானின் ஆரம்பமும், முடிவும் தீர்மானிக்கப்பட வேண்டும்.

## சர்வதேச பிறை ஆதரவாளர்களின் சந்தேகங்களும் அவைகளுக்குரிய மறுப்புக்களும்.

ஒரு நாட்டில் காணப்படும் பிறை ஏனைய நாடுகளிலும் பின்பற்றப்பட வேண்டும் என வாதிப்பவர்கள் சில ஹதீத்களை ஆதாரமாக முன் வைக்கின்றனர். அந்த ஹதீத்களும் அதற்குரிய பதில்களும் பின்வருமாறு:-

**முதலாவது சந்தேகம்:**

**روى أبو داود (1157) واللفظ له والنسائي (1556) وابن ماجه ((1653) من طريق أبي بشر عن أبي عمير بن أنس عن عمومة له من أصحاب النبي صلى الله عليه وسلم أن ركبا جاؤوا إلى النبي صلى الله عليه وسلم يشهدون أنهم رأوا الهلال بالأمس فأمرهم أن يفطروا وإذا أصبحوا أن يغدوا إلى مصلاهم، وفي رواية ابن ماجه: حدثنني عمومتي"**

!!ஒரு பயணக் கூட்டத்தினர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து தாங்கள் நேற்றுப் பிறையைக் கண்டதாகக் கூறினார்கள். எனவே, நபியவர்கள் நோன்பை விட்டுவிடுமாறும் மறு நாட்காலை தொழுமிடத்திற்குச் செல்லுமாறும் அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள் என நபித் தோழர்களாகிய தனது தந்தையின் சகோதரர்கள் கூறியதாக அபூ உமைா பின் அனஸ் என்பவர் அறிவிக்கிறார். (அபூதாவுத்:1157, அந்நஸாயீ:1556, இப்னு மாஜாஹ்:1653)

பயணக் கூட்டத்தினரின் சாட்சியை நபி (ஸல்) அவர்கள் ஏற்றுக் கொண்டது சர்வதேசப் பிறையை ஆதரிப்பதாக வாதிடுகின்றனர். இதற்குப் பின்வருமாறு மறுப்பு வழங்கப்படுகின்றது:-

ந்த ஹதீதின் அறிவிப்பாளரின் தொடரில் காணப்படும் அபூ உமைர் என்பவர், - 1
ஆவார். ஏனெனில், அவரிடமிருந்து அபூ பிஷ்ர் ( مجهول العين ). ;இணங்காணப்படாதவா என்பவரைத் தவிர யாரும் ஹதீதைப் பெற்றதாக தகவல் இல்லை. ஒரு ஹதீத் அறிவிப்பாளருக்கு குறைந்தது இரண்டு நம்பகரமான மாணவர்கள் இருக்க வேண்டும். ((அல்கிபாயா:150

இதனால் இப்னு அப்துல்பர், இப்னுல் கத்தான் போன்ற ஹதீத் கலை அறிஞர்கள் இவரை 'இணங்காணப்படாதவர்' என விமர்சித்துள்ளனர். அவ்விருவரின் மூலவாக்கியம் பின்வருமாறு:-

**قال ابن عبد البر في التمهيد (موسوعة شروح الموطأ 9/36): وأما أبو عمير بن أنس فلم يرو عنه غير أبي بشر، ومن كان هكذا فهو مجهول لا يحتج به، وقال ابن القطان (كما في نصب الراية 2/212) وعندي أنه حديث يجب النظر فيه ولا يقبل إلا أن تثبت عدالة أبي عمير. وقال الهيثمي في مجمع الزوائد تحت رقم: 2146: ولم أر أحدا روى عنه غير أبي بشر.**

மேலும் இப்னு ஹிப்பான், அபூஉமைரை 'நம்பகரமானவர்' எனக் கூறியதை ஏற்க முடியாது. ஏனெனில், அவர் இணங்காணப்படாத அறிவிப்பாளர்களை 'நம்பகரமானவர்கள்' எனக் கூறுவதால் 'கவனக் குறைவாளர்' என விமர்சிக்கப்படுகின்றார்.

மேலும், இப்னு ஸஃத் அவர்கள் அபூஉமைர் 'நம்பகரமானவர்', குறைந்த அளவு ஹதீத் உள்ளவர் எனக் கூறியதையும் ஏற்க முடியாது. யாரும் அறிவிக்காத மூன்று ஹதீத்களை மட்டும் அறிவிக்கும் அதே நேரத்தில் ஒரு மாணவர் மட்டுமே உள்ள அறிவிப்பாளரை ஒரு காலமும் 'நம்பகமானவர்' எனக் கூறமுடியாது.

2- அபூஉமைரின் ஹதீதில் சூரிய உச்ச நிலையை விட்டும் சாய்ந்த பின் பெருநாள் அறிவிக்கப்பட்டதாகவும், அடுத்த தினம் பெருநாள் தொழுகை நிகழ்த்தப்பட்டதாகவும் காணப்படுகின்றது. இத்தகவல்கள் வேறு எந்த ஸஹீஹான ஹதீத்களிலும் கிடையாது. இணம் காணப்படாத ஒருவர் அறிவிக்கும் புதிய தகவல்களை ஏற்க முடியாது. இதை இமாம் தாரக்குத்னி (றஹி) அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள்:-

'ஒரே மாணவர் உள்ள அறிவிப்பாளரின் ஹதீதை வேறு ஒரு அறிவிப்பாளர் அதே போன்ற ஹதீதை அறிவிக்கும் வரை ஏற்க முடியாது' (ஸு னன் அத்தாரக்குத்னீ:3:174)

3- இந்த ஹதீதின் அறிவிப்புக்களில் பல தளம்பல்கள் காணப்படுகின்றன. இதில் 'பயணக் கூட்டத்தினர்' என்றும் வேறு சிலதில் 'ஒரு கூட்டத்தினர்' என்றும் இன்னும் சில வேறு அறிவிப்புக்களில் 'அவர்கள் பிறை கண்டதாகவும் சாட்சி நிருபணமானதாவும்' கூறப்பட்டுள்ளது.

**இரண்டாவது சந்தேகம்:**

(ஆ)

**روى النسائي (2115) من طريق يحيى بن زكريا بن أبي زائدة عن حسين بن الحارث الجدليّ عن عبد الرحمن بن زيد بن الخطاب قال: حدثني أصحاب رسول الله صلى الله عليه وسلم أن رسول الله صلى الله عليه وسلم قال:..........فإن**

## شهد شاهدان فصوموا وأفطروا

'இரண்டு சாட்சிகள் பிறை கண்டதாக' சாட்சி கூறினால் நோன்பை நோற்றுக் கொள்ளுங்கள், நோன்பை முடித்துக் கொள்ளுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக பல நபித்தோழர்கள் அறிவித்ததாக அப்துர் றஹ்மான் பின் ஸைத் கூறுகிறார். (நஸாயீ: 2115)

உலகில் எப்பகுதியிலாவது பிறை கண்டதாக இரண்டு நீதமான முஸ்லிம்களின் சாட்சியை சகல முஸ்லிம்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை இந்த ஹதீதிலிருந்து விளங்கலாம் என சர்வதேச பிறை ஆதரவாளர்கள் வாதிடுகின்றனர். இதற்குரிய மறுப்புப் பின்வருமாறு:-

1- இந்த ஹதீத் பலயீணமானதாகும். ஏனெனில், அதில் வெளிப்படையான மறைமுகமான வடுக்கல் காணப்படுகின்றது:-

தீதின் அறிவிப்பாளர்களின் தொடரில் காண்பபடும் 'ஹு ஸைன் பின் அல் ஹாரித் என்பவர்` ஆவார். 'கவனக்குறைவாளர் என ( مجهول الرجال ) ;நம்பகத் தன்மை அறியப்படாதவா அடையாம் காணப்பட்ட இப்னுல் ஹிப்பான்' என்பவரும் இவபை பின்பற்றிய இப்னு கல்பூன் .;என்பவருமே இவரை நம்பகரமானவர் என கூறியுள்ளனா

எனக் கூறியதற்கு 'நம்பகமானவர்' எனக் ( معروف ) ";ப்னுல் மதீனி 'அறியப்பட்டவா, கூறியதாக எடுத்துக் கொள்ள முடியாது. அறியப்பட்டவர் என்பதற்கு 'நம்பகமானவர் என அறியப்பட்டவர்' 'பலயீனமானவர் என அறியப்பட்டவர்', 'ஹதீதைத் தேடுவர் என அறியப்பட்டவர்' என பல அர்த்தங்கள் உள்ளன. முரண்பட்ட பல அர்த்தங்களுள்ள சொல்லை அடிப்படையாகக் கொண்டு, ஒரு அறிவிப்பாளரை 'நம்பமானவர்' எனக் கூற ) ( صدوق ) முடியாது. எனவே, இப்னு ஹஜர் அவர்கள் 'ஹு சைன் பின் ஹாரித்' என்பரை சாதாரண நம்பகத் தன்மை உள்ளவர்) எனக் கூறியது நுனுக்கமானதல்ல. அவரை .;நம்பகத் தன்மை அறியப்படாதவர்) என்றே கூற வேண்டும) (مستور)

மாம் நஸாயின் அறிவிப்பில் யஹ்யா பின் ஸகரிய்யா என்பவருக்கும், ஹு சைன் பின், · அல் ஹாரிஸ் என்பவருக்கும் இடையில் 'ஹஜ்ஜாஜ் பின் அர்தாஹ்' என்பவர் விழுந்துள்ளார். இமாம் அஹ்மத் அவர்களின் அறிவிப்பில் ஹஜ்ஜாஜ் என்பவர் இடம்பெற்றுரிப்பது அதற்கு சான்றாகும். (முஸ்னத் 4:321 இல:18895) மேலும் தாறக்குத்னி அவர்களின் அறிவிப்பில், யஸீத் பின் ஹாறூன் என்பவருவம் ஹஜ்ஜாஜை கூறியுள்ளார். (ஸு னன் தாரக் குத்னி இல:2193) 'ஹஜ்ஜாஜ்' இடம் பெற்று வரும் அறிவிப்புத்தான் சரியானது என இமாம் அல்-அவர்கள் கூறியுள்ளார்கள். (த∴தீபுல் கமால் 17:123). நஸாயின் அறிவிப்பில் ( المزي ) மிஸ்ஸி விழுந்த ஹஜ்ஜாஜ் என்பவரை, ஹதீதில் அதிகம் தவறிழைப்பவர், அறிவிப்பாளர் தொடரில் காணப்படும் பலயீனமானவர்களை மூடி மறைப்பவர் என ஹதீத் கலை அறிஞர்களால் விமர்சிக்கப்படுகின்றார். (த∴தீபுல் கமால் 5:420-428) எனவே இந்த ஹதீஸ் ஹஜ்ஜாஜ் .என்பவர் இடம்பெற்றிருப்பதன் மூலமும் பலயீனமாகி விட்டது

- இந்த பலயீனமான ஹதீதில், நோன்பு நோற்பதற்கு **கட்டாயம்** இரண்டு சாட்சிகள் அவசியம் எனக் கூறப்பட்டுள்ளது. இது பின்வரும் ஊர்ஜிதமான ஹதீதுக்கு முரணானதாகும்:-

روى أبوداود (2342) وابن حبان (3447 من طريق مروان بن محمد عن عبد الله بن وهب عن يحيى بن عبد الله بن سالم عن أبي بكر بن نافع عن أبيه عن ابن عمر رضي الله عنهما قال: تراءى الناس الهلال فأخبرت رسول الله صلى الله عليه وسلم أني رأيته فصام وأمر الناس بصيامه، وتابع مروان هارون بن سعيد الأيلي رواه الحاكم في المستدرك 1/423 وصححه على شرط مسلم ووافقه الذهبي.

'மக்கள் பிறையைப் பார்த்தார்கள், நபி (ஸல்) அவர்களிடம் நானும் பிறை பார்த்ததாகச் செய்தி கொடுத்தேன். அதனால் நபி (ஸல்) அவர்கள் நோன்பு நோற்றார்கள். மக்களையும் நோன்பு நோற்குமாறு கட்டளையிட்டார்கள்' என இப்னு உமர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (அபூதாவூத்: 2342, இப்னு ஹிப்பான்: 3447)

தில் நபி (ஸல்) அவர்கள் நோன்பை ஆரம்பிப்பதற்கு இப்னு உமர் (றழி) அவர்களின் ஒரே, சாட்சியை ஏற்றுள்ளார்கள். இதன் மூலம், நோன்பு நோற்பதற்கு ஒரு சாட்சி போதுமானது என்பது தெளிவாகிறது. இந்த ஊர்ஜிதமான ஹதீதுக்கு முரண்பட்ட ஹுஸைன் பின் அல்ஹாரித் என்பவரின் ஹதீத் முன்கா (**منكر**) ஆகும.;

**மூன்றாவது சந்தேகம்:**

روى أبوداود (2339) وأحمد (23069) والدارقطني (2202) عن ربعي بن حراش عن رجل من أصحاب النبي صلى الله عليه وسلم قال: اختلف الناس في أخر يوم من رمضان فقدم أعرابيان فشهدا عند النبي صلى الله عليه وسلم بالله لأهلا الهلال أمس عشية فأمر رسول الله صلى الله عليه وسلم الناس أن يفطروا.

'மக்கள் றமழான் மாதத்தின் இறுதி நாளில் கருத்து வேற்றுமைபட்டடார்கள். அப்போது இரண்டு நாட்டுப் புறத்தார்கள் வந்து தாங்கள் நேற்றுப் பிறை கண்டதாக நபி (ஸல்) அவர்களிடம் சாட்சி கூறினார்கள் உடனே நபியவர்கள் நோன்பை முடித்துக் கொள்ளுமாறு மக்களுக்குக் கட்டளையிட்டார்கள் என 'ஒரு நபித் தோழர்' கூறியதாக ரிப்யீ பின் ஹிறாஷ் அறிவிக்கின்றார்கள். (அபூதாவூத்: 2339, அஹ்மத்: 23069, தாரக்குத்னி: 2202)

சர்வதேசப் பிறைவாதிகள் 'நபியவர்கள் மதீனாவுக்கு வெளியிலிருந்து வந்த சாட்சியை ஏற்றுக் கொண்டமை சர்வதேசப் பிறைக்கு சான்று எனக் கூறுகின்றனர்.

இந்த ஹதீத் ரிப்யீ பின் ஹிறாஷ் என்ற தாபியீ, நபித் தோழரின் பெயரைக் குறிப்பிடாமல் "ஒரு ஸஹாபியைத் **தொட்டும்'** என்று கூறியதனால் பலயீனமானதாகும். அவர் 'ஒரு ஸ ஹாபியிடம் **கேட்டேன்"** எனக் கூறியிருந்தால் ஏற்க முடியும். ஆனால், அவர் அவ்வாறு கூறவில்லை. நாம் இந்த வடு சம்பந்தப்பட்ட ஹதீத் கலை விதியை இப்னு ஹஸ்ம் அவர்களின் ஹதீத் கலை தத்துவங்கள் என்ற நூலின் 797-800 பக்கங்களில் தெளிவுபடுத்தியுள்ளோம்.

## மக்களை விட்டும் தனித்துப் பெருநாள் கொண்டாடுவது நபிவழியல்ல.

சர்வதேசப் பிறை ஆதரவாளர்கள், ஏனைய மக்களுடன் பெருநாள் கொண்டாடாமல், தனித்துப் பெருநாள் கொண்டாடுவது நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கு முரணான பாவச் செயலாகும். இதைப் பின்வரும் ஹதீத் உறுதிப்படுத்துகின்றது:-

**روى الترمذي (802) عن عائشة رضي الله عنها قالت: قال رسول الله صلى الله عليه وسلم: الفطر يوم يفطر الناس والأضحى يوم يضحي الناس، وقال: هذا حديث حسن غريب صحيح من هذا الوجه، وله شاهد عن أبي هريرة رضي الله عنه، رواه أبوداود ( 2324) بسند صحيح ورواه الترمذي (697) من وجه آخر.**

'எந்த நாளில் மக்கள் நிறைவு செய்து நோன்பு நோற்காமல் பெருநாள் கொண்டாடுகிறார்களோ, அதுவே ஈதுல் பித்ருடைய நாளாகும். எந்த நாளில் மக்கள் குர்பானி கொடுக்கிறார்களோ, அதுவே குர்பானிப் பெருநாளாகும்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (திர்மிதி: 802)

இந்த ஹதீதின் விளக்கம், 'பெரும்பாலான மக்களுடன் நோன்பு நோற்க வேண்டும், நோன்பை முடித்துக் கொள்ள வேண்டும் என்பதாகும். மக்கள் ஒரு தினத்தை நோன்பின் ஆரம்பமாக, அல்லது இறுதியாக தீர்மானித்து பின்பு அது தவறு எனத் தெரிய வந்தால் நோன்புப் பெருநாளும் செல்லுபடியாகும். அவைகள் அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்' இதில் இமாம்கள் மத்தியில் ஏகோபித்த கருத்து நிலவுகின்றது. இதை இமாம் திர்மிதி, இமாம் ஹத்தாபி, இமாம் இப்னு அப்துல் பர் ஆகியோர்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள்:-

**قال الترمذي في سننه 2/74: وفسر بعض أهل العلم هذا الحديث فقال: إنما معنى هذا أن الصوم والفطر مع الجماعة وعظم الناس.**

இந்த ஹதீதின் பொருள் பெரும்பாலான மக்களுடன் நோன்பை ஆரம்பித்து, அவர்களுடனே முடித்துக் கொள்ள வேண்டும் என்பதாகும் என இமாம் திர்மிதி அவர்கள் கூறுகிறார்கள். (அஸ்ஸு னன்:2:74)

**وقال الخطابي في معالم السنن : معنى الحديث أن الخطأ موضوع عن الناس فيما كان سبيله الاجتهاد فلو أن قوما اجتهدوا فلم يروا الهلال إلا بعد الثلاثين فلم يفطروا حتى استوفوا العدد ثم ثبت عندهم أن الشهر كان تسعا وعشرين فإن صومهم وفطرهم ماض لا شيء عليهم من وزر أو عتب.**

இந்த ஹதீதின் பொருள் ஆய்வுக்குப்பட்ட விடயங்களில் மனிதர்களின் தவறு மன்னிக்கப்படக் கூடியது. எனவே, ஒரு கூட்டம் உரிய முறைப்படி முயற்சிசெய்து பிறை காணாமல் விட்டு முப்பது நாட்கள் நோன்பு நோற்ற பின்பு மாதம் 29 நாட்கள்தான் என்பது ஊர்ஜிதமானால் அவர்களின் நோன்பும் பெருநாளும் செல்லுபடியாகின்றன. அவர்களுக்கு எவ்விதப் பாவமோ பழியுமோ கிடையாது என ஹத்தாபி கூறுகிறார்கள்.

**وقال ابن عبد البر في التمهيد (موسوعة شروح الموطأ (9/33): قد أجمعوا على أن الجماعة لو أخطأت الهلال في ذي الحجة فوقفت بعرفة في اليوم العاشر أن ذلك يجزئها فكذلك الفطر والأضحى والله أعلم.**

மக்கள் துல் ஹஜ் பிறை காண்பதில் தவறிழைத்து பத்தாவது நாள் அறபாவில் தறித்து நின்றாலும், அதே போல் நோன்பை முடித்துக் கொள்வதிலும் ஹஜ் பெருநாள் கொண்டாடுவதிலும் தவறிழைத்தாலும் அவைகள் அவர்களுக்கு செல்லுபடியாகின்றன என்பதில் அறிஞர்கள் மத்தியில் ஏகோபித் கருத்து (இஜ்மா) நிலவுகிறது என இப்னுல் அப்துல் பர் கூறுகிறார்.

ஜம்யிய்யதுல் உலமா சபையோ அல்லது பிறைக் கொமிட்டியோ பிறை தீர்மானிப்பதில் சில நேரங்களில் தவறு செய்யலாம். அவ்வாறு தவறு இடம் பெற்றுவிட்டால் மேற் கூறிய இஸ்லாமிய சட்டத்தின்படி எமது நோன்போ அல்லது பெருநாட்களோ பாழாகுவதில்லை. பிறையைத் தீர்மானித்தவர்களுக்குப் பாவமுமில்லை. மாறாக அவர்களின் முயற்சிக்கு ஒரு நன்மையுண்டு. இதை பின்வரும் ஹதீத் தெளிவுபடுத்துகின்றது.

**روى البخاري** (7352) **ومسلم** (4462) **عن عمرو بن العاص رضي الله عنه أنه سمع رسول الله صلى الله عليه وسلم يقول**: **إذا حكم الحاكم فاجتهد ثم أصاب فله أجران، وإذا حكم فاجتهد ثم أخطأ فله أجر**.

தீர்மானிப்பவர் நன்கு ஆராய்ந்து பின்னர் சரியான முடிவை அடைந்தால் அவருக்கு இரு நன்மை உண்டு. தீர்மானிப்பவர் நன்கு ஆராய்ந்து தீர்ப்பளித்தும் அதில் தவறு ஏற்பட்டுவிட்டால் அவருக்கு ஒரு நன்மையுண்டு' என நபி (ஸல்) அவர்கள் கூறக் கேட்டதாக அம்றுப்னுல் ஆஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (புஹாரி:7352, முஸ்லிம்:4462)

மேலும் சர்வதேசப் பிறையை ஆதரிக்கும் அஷ்ஷெய்க் அல்பானி (றஹ்) அவர்கள் கூட முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையைக் கருத்திற் கொண்டு ஒவ்வொரு நாட்டு மக்களும் அந்நாட்டுடன் நோன்பு நோற்குமாறு வேண்டிக் கொள்கின்றார்கள். அவர்களின் மூல வாக்கியம் பின்வருமாறு.

**وإلى أن تجتمع الدول الإسلامية على ذلك فإني أرى أن على شعب كل دولة ان يصوم مع دولته ولا ينقسم على نفسه فيصوم بعضهم معها وبعضهم مع غيرها، تقدمت في صيامها أو تأخرت، لما في ذلك من توسيع دائرة الخلاف في الشعب الواحد كما وقع في بعض الدول العربية منذ بضع سنين والله المستعان.** (**تمام المنة للألباني ص** 398)

சுர்வதேச பிறை விவகாரத்தில் இஸ்லாமிய நாடுகள் உடன்பாட்டுக்கு வரும் வரை ஒவ்வொரு நாட்டு மக்களும் தத்தமது நாட்டுடன் நோன்பு பிடிக்க வேண்டும். சிலர் தனது நாட்டுடனும் மற்றும் சிலர் வேறு நாட்டுடனும் நோன்பு நோற்று தங்களுக்குள் பிளவுபட்டுக் கொள்ளக் கூடாது என்பதே என் கருத்தாகும். பல வருடங்களாக சில அறபு நாடுகளில் ஏற்பட்டது போன்று இது ஒரே மக்களுக்கு மத்தியில் விரிவான முரண்பாட்டை தோற்றுவிக்கும். (தமாமுல் மின்னாஹ்:பக்கம்398)

இன்ஷா அல்லாஹ் தொடரும்……